

## மலையகத்திலும் தமிழர்களின்

# காணிகள் அபகரிப்பு

ஐயாதுறை

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணத்தினை வரையறுக்கப்பட்டதாக காணப்பட்ட காணி சுவீகரிப்பு தற்போது மலையகத்தையும் ஆக்கிரமித்துள்ளதை அவதானிக்க முடிகிறது. மலையகத்தில் இடம்பெறும் சிங்கள குடியமர்த்தல் என்பது இலைமறை காய்போல் காணப்படுகிறது. மலையகத்தில் இடம்பெறும் காணி சுவீகரிப்பிற்கு எதிராக குரல்கொடுக்கும் மலையக அரசியல்வாதிகளின் எண்ணிக்கை விரல் நீட்டி எண்ணும் அளவிற்கு காணப்படுகிறது.

“அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு பெருந்தோட்ட மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ள பெரும்பான்மை அரசியல்வாதிகள், அங்கு இனவாதத்தைப்புகுத்தி பெருந்தோட்ட மக்களுக்கும் அங்குள்ள கிராம மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில் செயற்பட்டுவருகின்றார்கள். ஏற்கனவே வாழ்வாதார ரீதியில் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்திருக்கக்கூடிய பெருந்தோட்ட மக்களின் காணிகளை வலுக்கட்டாயமாக சுவீகரித்து, அவர்களை மேலும் துன்பத்திற்குள்ளாக்குவதை அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்திக்கொள்ளவேண்டும்” என்று பாராளுமன்ற உறுப்பினர் வடிவேல் சுரேஷ் வலியுறுத்தியுள்ளார்.

அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுள்ள 25 மாவட்டங்களுக்குமான அபிவிருத்தி செயற்திட்டத்தின்கீழ் மலையக மக்களுடைய தேவைகள் என்ன, அவர்களது உரிமைகள் என்ன என்பதைப் புரிந்துகொள்ளாமல் மலையக மக்கள் வாழும் காணிகளைக் கையகப்படுத்துவதற்கான முயற்சிகள் பல்வேறு பிரதேச செயலக அதிகாரிகளாலும் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாக இப்போது பாரிய அசம்பாவிதமொன்று நேர்ந்திருக்கின்றது. மேற்படி செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக பதுளை மாவட்டத்தின் கோணக்கலை பிரதேசத்திலுள்ள காணியை அபகரித்து, அங்கு அடிக்கல் நாட்டுவதற்கு முற்பட்டபோது அங்குள்ள தமிழ் மற்றும் சிங்கள மக்களுக்கு இடையில் கைகலப்பு ஏற்பட்டுள்ளது.

அதுமாத்திரமன்றி ஹொப்டன், லுணுகலைப் பிரதேசத்திலும் பெருந்தோட்ட மக்களின் காணியை மையப்படுத்தி பிரச்சினையேற்பட்டிருக்கின்றது. மலையகத்தை அபிவிருத்தி செய்யும் போர்வையில் அரசாங்கமும் பெருந்தோட்டக் கம்பனிகளும் இணைந்து மலையகத் தமிழ் மக்களின் காணிகளை பலவந்தமாக சுவீகரித்து, அவற்றில் வெளித்தரப்பினரைக் குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

அபிவிருத்தி என்று கூறிக் கொண்டு பெருந்தோட்ட மக்கள் செறிந்துவாழும் பகுதிகளுக்குள் ஊடுருவியுள்ள பெரும்பான்மை அரசியல்வாதிகள், அங்கு இனவாதத்தைப்புகுத்தி பெருந்தோட்ட மக்களுக்கும் அங்குள்ள கிராம மக்களுக்கும் இடையில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கும் வகையில்

> மலையகத்தை அபிவிருத்தி செய்யும் போர்வையில் அரசாங்கமும் பெருந்தோட்டக் கம்பனிகளும் இணைந்து மலையகத் தமிழ் மக்களின் காணிகளை பலவந்தமாக சுவீகரித்து, அவற்றில் வெளித்தரப்பினரை குடியமர்த்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

செயற்பட்டுவருவது தற்போது நிரூபணமாகியுள்ளது. அந்த முரண்பாடுகளுக்குக் காரணமானவர்களுக்கு எதிராக பொலிஸார் சட்டநடவடிக்கை எடுக்காதது ஏன்? அரசியல்வாதிகளுக்கும் சாதாரண பொது மக்களுக்கும் சட்டம் வெளிவேறு விதமாக அமுல்படுத்தப்படுவது ஏன்?

களுத்துறை மாவட்டத்தில் உள்ள தோட்டப்புறங்களில் இடம்பெறும் காணி சுவீகரிப்பு மற்றும் சிங்கள குடியமர்த்தல் குறித்து தமிழ் அரசியல்வாதிகள் கருத்திற் கொள்ளாமல் இருப்பதும்,பாராளுமன்றில் கருத்துரைக்காமல் இருப்பதும் அவதானத்திற்குரியது.

களுத்துறை மாவட்டத்தில் உள்ள தோட்டப் பகுதிகளில் காணி அபகரிப்பு மற்றும் சிங்கள குடியமர்த்தல் தீவிரமடைந்து வருவதை அவதானிக்க முடிகிறது. மத்துகம,அகலவத்தை,ஹொரன ஆகிய பகுதிகளில் உள்ள தோட்டங்களில் காணி அபகரிப்பு தீவிரமடைந்துள்ளது. தோட்டத்தில் பிறந்து வளர்ந்து அங்கு வாழும் ஒருவர் 7 பேர்ச்சஸ் காணியை பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு சவால்களை எதிர்க்கொள்ள நேரிடுகிறது. களுத்துறை மாவட்டத்தில் தோட்டபுறங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காண்பது எட்டாக்கனியாகவே காணப்படுகிறது.